டிசம்பர் 24,2020 அன்று புதுப்பிக்கப்பட்டது

# கோவிட் -19 தடுப்பூசிகள் (Pfizer-BioNTech & Moderna ஆல் உருவாக்கப்பட்டவை]

## கோவிட்-19

கோவிட்-19 என்னும் வைரஸ் தொற்று நுரையீரலை முதன்மையாக தாக்கக்கூடியதாகும். சிலருக்கு மிதமான நோய்வாய்ப்படுதல் இருக்கக்கூடும். வயதானவர்கள் அல்லது முன்னதாகவே ஏதேனும் உடல்நல பிரச்சனைகள் உள்ள நபர்கள் உள்ளிட்டவர்களுக்கு அதிகமான நோய்வாய்ப்படுதல் இருக்கக்கூடும். மிகவும் அரிதாக, சில குழந்தைகளுக்கு ஓர் தீவிர அழற்சி நிலை ஏற்படக்கூடும். கோவிட்-19 இன் நீண்டகால விளைவுகள் இன்னும் முழுமையாகத் தெரியப்படவில்லை. சில நபர்கள் தங்களது பணி அல்லது வசிக்கும் நிலைகள் காரணமாக கோவிட்-19 தொற்று ஏற்படும் அதிக ஆபத்தில் உள்ளார்கள்.

## இந்த தடுப்பூசிகள் எவ்வாறு செயல்புரிகிறது

தடுப்பூசியானது உங்கள் உடலில் உள்ள அணுக்கள் கோவிட்-19-ஐ உண்டாக்கும் வைரசில் குறிப்பாக கண்டறியப்படும் ஓர் புரதத்தை உருவாக்கும். இந்த “ஸ்பைக் புரதங்கள்”, நமக்கு எந்த ஆபத்தையும் உண்டாக்காது என்றாலும், நமது உடல் ஆண்டி-பாடீஸ்ஸை உருவாக்க ஊக்குவிக்கும். நமது புதிய ஆண்டி-பாடீஸ் நாம் வைரசுக்கு வெளிப்பட்டாலும் நோய்வாய்ப்படாதவாறு இருப்பத்திலிருந்து பாதுகாக்கும். தடுப்பூசியில் வைரஸ் இல்லை என்பதால், இது கோவிட்-19 ஐ உண்டாக்காது.

இரண்டு தடுப்பூசிகளும் பாதுகாப்பு நியமங்களை பூர்த்தி செய்துள்ளதா என்பதை உறுதி செய்ய பெரும் மருத்துவ ஆய்வுகளில் பரிசோதிக்கப்பட்டு, இரண்டு தடுப்பூசிகளும் ஹெல்த் கனடா-ஆல் உரிமம் அளிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

தடுப்பூசி செயல்முறை

இரண்டு தடுப்பூசிகளும் இரண்டு மருந்தளவுகளில் வழங்கப்படவேண்டும். Pfizer மருந்தளவுகள் 16 வயது மற்றும் அதற்கும் மேற்பட்ட வயதுடையவர்களுக்கு பெரியவர்களுக்கும் குறைந்தது 21 நாட்கள் இடைவெளியில் வழங்கப்படவேண்டும். Moderna மருந்தளவுகள் 18 வயது மற்றும் அதற்கும் மேற்பட்ட வயதுடையவர்களுக்கு பெரியவர்களுக்கும் குறைந்தது 28 நாட்கள் இடைவெளியில் வழங்கப்படவேண்டும்

## தடுப்பூசி பலன்கள்

சிறந்த பாதுகாப்பிற்கு 21 நாட்கள் இடைவெளியில் இரண்டு தடுப்பூசி மருந்தளவுகள் வழங்கப்படவேண்டும். இரண்டு மருந்தளவுகளை முடித்தபிறகு, கோவிட்-19 க்கு எதிரான அதிகபட்ச

பாதுகாப்பை அடைவதற்கு மேலும் ஒன்று அல்லது இரண்டு வாரங்கள் எடுக்கக்கூடும். இத்தருணத்தில், இந்த தடுப்பூசிக்கான நீண்ட-கால பாதுகாப்பு குறித்த எந்த தகவலும் இல்லை. ஆய்வுகளில், இந்த தடுப்பூசி 95% பயனடைவை அளித்தது.

தடுப்பூசி வழங்கப்பட்டபிறகும் உங்களுக்கு கோவிட்-19 தொற்று ஏற்படுவதற்கான சிறிய வாய்ப்பு இன்னும் உள்ளது. சமூக இடைவெளி கடைபிடித்தல், முகக்கவசம் அணிதல் மற்றும் நோய்வாய்ப்பட்டிருந்தால் வீட்டில் தங்குவது போன்ற பொது ஆரோக்கிய நடைமுறைகளைத் தொடர்ந்து கடைபிடிப்பது முக்கியமானதாகும். தடுப்பூசி வழங்கப்பட்டபிறகும்கூட, உடல்நல பராமரிப்பு மற்றும் இதர ஊழியர்கள் தனிநபர் பாதுகாப்பு சாதனத்தை (PPE) கட்டாயம் அணிய வேண்டும்.

**பக்க விளைவுகள் மற்றும் ஆபத்துகள்**

சில நபர்கள் தடுப்பூசி காரணமாக பக்க விளைவுகளைச் சந்திக்கக்கூடும், ஆனால் அது மிதமானதாக மட்டுமே இருக்கும் மற்றும் சில நாட்களில் குணமடைந்துவிடும். அறிகுறிகளில் சிலவை, நோய்எதிர்ப்பை உருவாக்கும் பொருட்டு உடல் பதிலளிப்பின் ஒரு பகுதியாக இருக்கும்.

இந்த தடுப்பூசிக்கான மருத்துவ ஆய்வுகளில் தெரிவிக்கப்பட்ட பொதுவான பக்கவிளைவுகளில் உள்ளடங்குபவை:

| மிகவும் பொதுவானவை ≥10% (10 மருந்தளவுகளில் 1 க்கும் மேலாக) | பொதுவானவை 1%-10% (100 இல் 1 முதல் 10 மருந்தளவுகளில் 1 வரை) | பொதுவானவை இல்லாதவை 1% (100 மருந்தளவுகளில் 1) | **மிகவும் அரிதானது** |
|---|---|---|---|
| ○ ஊசி செலுத்திய இடத்தில் வலி<br>○ தலைவலி<br>○ சோர்வாக உணர்தல்<br>○ தசை அல்லது மூட்டு வலி<br>○ காய்ச்சல் அல்லது குளிர் நடுக்கம்<br>○ அக்குள் கீழ் வீக்கம் அல்லது மென்மை (Moderna தடுப்பூசியில் மட்டுமே) | ○ ஊசி செலுத்தப்பட்ட இடத்தில் சிவந்துபோகுதல் மற்றும் வீக்கம்<br>○ குமட்டல் & வாந்தி (Moderna தடுப்பூசியில் மட்டுமே) | விரிவாக்கப்பட்ட நிணநீர் கணுக்கள் | அனாபிலாக்ஸிஸ் போன்ற தீவிர ஒவ்வாமை எதிர்வினைகள் |

அரிதான நிலைகளில், தீவிர ஒவ்வாமை எதிர்வினைகள் (அனாபிளாக்ஸிஸ்) ஏற்படலாம். ஒவ்வாமை எதிர்வினைகள் குணப்படுத்தப்படலாம் மற்றும் அவை தற்காலிகமானவை. உங்களுக்கு மூச்சு விடுவதில் சிரமம் ஏற்பட்டாலோ, முகத்தில் மற்றும் தொண்டையில் படை அல்லது வீக்கம் ஏற்பட்டால், மருத்துவ உதவியைப் பெறவும். தடுப்பூசியை பெற்ற நபர்களில் தடுப்பூசி பக்க விளைவுகளை தொடர்ந்து கண்காணிக்க வேண்டும். தடுப்பூசிக்கு எதிராக நீங்கள் ஓர் எதிர்வினையைப் பெற்றால், பக்கவிளைவை பொது ஆரோக்கிய அமைப்பிற்கு நேரடியாக தெரிவிக்கூடிய உங்கள் உடல்நல வழங்குனரைத் தொடர்பு கொள்ளவும். தடுப்பூசி தொடர்ந்து பாதுகாப்பாக இருப்பதை உறுதி செய்ய, பொது ஆரோக்கிய அமைப்பு தெரிவிக்கப்பட்ட பக்கவிளைவுகளை தொடர்ந்து கண்காணிக்கும்.

## முன்னெச்சரிக்கைகள்

- உங்களுக்கு காய்ச்சல் போன்ற கோவிட்-19 அறிகுறிகள் இருந்தாலோ அல்லது கடந்த 14 நாட்களில் ஓர் தடுப்பூசியைப் பெற்றிருந்தாலோ, தடுப்பூசியைத் தாமதப்படுத்தவும்.
- தடுப்பூசியின் இரண்டு மருந்தளவுகளைப் பெற்ற பிறகு குறைந்தது இரண்டு மாதங்களுக்கு கர்ப்பம் தரிப்பதைத் தவிர்த்திடுங்கள்.
- நீங்கள் இரத்தத்தை மெல்லியதாக்கும் மருந்தை உட்கொண்டிருந்தால், அவர்கள் ஒரு சிறிய ஊசியைப் பயன்படுத்துவார்கள், சிராய்ப்பு ஏற்படுவதைக் குறைக்க தடுப்பூசி போடப்பட்டு நீண்ட நேரத்திற்கு நீங்கள் அழுத்தம் அளிக்க வேண்டும்.

## உங்களுக்குக் இந்த நிலைகள் இருந்தால், இந்த தடுப்பூசியை போட்டுக்கொள்ளாதீர்கள்:

- பாலிஎதிலின் கிளைகால் உள்ளிட்ட உட்பொருட்கள் கொண்ட எந்த ஒரு தடுப்பூசிகளுக்கு ஒவ்வாமை இருந்தாலோ; அல்லது
- இந்த தடுப்பூசியின் முந்தைய மருந்தளவிற்கு ஓர் தீவிர எதிர்வினை ஏதேனும் இருந்தால்.

## உங்களுக்கு பின்வரும் நிலைகள் இருந்தால் முதலில் உங்கள் சுகாதார பராமரிப்பு வழங்குனரை ஆலோசிக்கவும்:

- 16 வயதிற்கு குறைவாக இருப்பவர்கள் ( நீங்கள் 12 முதல் 15 வயதிடையே இருப்பவராக இருந்தால் Pfizer தடுப்பூசி வழங்கப்படலாம்);
- கர்ப்பமாக இருந்தாலோ அல்லது தாய்ப்பால் புகட்டுபவராக இருந்தாலோ; அல்லது
- நோய்வாய்ப்படுதல் அல்லது சிகிச்சை அல்லது ஓர் இரத்த குறைபாடு காரணமாக மோசமான நோய்எதிர்ப்பு மண்டலத்தை கொண்டிருந்தால்.

**மேலும் தகவல்களுக்கு**, உங்கள் உடல்நல பராமரிப்பு வழங்குனருடன் பேசவும், அல்லது இந்த வலைப்பக்கத்தைப் பார்வையிடவும் toronto.ca/COVID19.

## ஆதாரங்கள்

**தடுப்பூசிகள் மீதான தேசிய அறிவுரை அமைப்பு. கோவிட்-19 தடுப்பூசிகள் பயன்பாடு மீதான பரிந்துரைகள். டிசம்பர் 2020. இதில் பார்க்கலாம் :** https://www.canada.ca/en/public-

health/services/immunization/national-advisory-committee-on-immunization-naci/recommendations-use-covid-19-vaccines.html